நான் கலந்த திருவிதாங்கூர்

தமிழர் போராட்டம்

543

ஆசிரியர்

தியாகி பொன் சின்னதம்பி

நான் கலந்த திருவிதாங்கூர்

தமிழர் போராட்டம்

ஆசிரியர்

தியாகி பொன் சின்னதம்பி

வெளியீடு

வெற்றி பதிப்பகம்

எழில்குடி, அருமனை

1989 [illegible]

முதற்பதிப்பு: ஜனுவரி 1981
இரண்டாம் பதிப்பு: செப்டம்பர் 1989

விலை ரூபாய் 7

அச்சிட்டோர்:
காபிரியேல் அச்சகம்
வெட்டூர்ணிமடம் நாகர்கோவில்-3
தொலைபேசி: 4753 & 5753

முன்னுரை

தமிழில் கிடைத்திருக்கும் இலக்கண நூல்களில் முதல் நூலாகிய தொல்காப்பியம் அதங்கோட்டு ஆசான் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது. அந்த புண்ணிய பூமி மலையாள அரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாக இருந்தது. மலையாள அரசாங்கம் மக்கள் தாயத்தை ஒழித்து மருமக்கள் தாயத்தைத் தமிழ் மண்ணில் வேரூன்றச் செய்தது. தமிழ் மக்கள் நாலாந்தர மக்களாகக் கருதப்பட்டனர். இதனை எதிர்த்துப்போராடிய பெரியவர்கள் பலர். ஆனால் அந்த புண்ணியபூமியைத் திருவிதாங்கூர் மலையாள அரசோடு போராடித் தாய்த்தமிழகத்தோடு இணைத்த பெருமை குமரித்தந்தை A. நேசமணியையே சாரும். அவரோடு இணைந்துநின்று போராடிய தலைவர்களுள் ஒருவரான திரு. சாம் நதானியெலும் அவர் தொண்டர் சிலரும் தாணுபிள்ளையின் கட்சியில் புகலிடம் தேடினர். (பட்டம் தாணுபிள்ளை அன்றைய திருவிதாங்கூரின் முதல்வர் தமிழனை ஒழித்துக்கட்டவேண்டும் என்பது அவர் கொள்கை). நதானியெல் பிரிந்துசென்ற சில நாட்களுக்குள்ளாகவே திருவிதாங்கூர் தமிழரியக்கத்தில் தேர்தல் நடந்தது. திரு. A. நேசமணியின் ஆசிபெற்ற வேட்பாளர் வெற்றி பெற்றார். தோல்வி அடைந்த திரு. தாணுலிங்க நாடாரும் திரு. டி. டி. டானியெலும் புதிய கட்சி தொடங்கினர். அந்த கட்சியின் தேர்தல் சின்னம் வண்டி. ஆகையால் மக்கள் வண்டிக் காங்கிரஸ் என்று அழைத்தனர். அதில் மலையாள அரசோடு சங்கமம் ஆன நதானியெல் தொண்டர்களாகிய திரு. பொன்னுமணி, திரு. வேலாயுதம், திரு. P. S. மணி ஆகிய மூன்று தொண்டர்களும்

வண்டிக் காங்கிரஸில் சேர்ந்தனர். திரு. நதானியெல், திரு. டி. டி. டானியெல்; திரு. தாணுலிங்க நாடார் ஆகியோர் பிரிந்து சென்ற நேரத்தில் குமரித்தந்தை நேசமணியுடன் சேர்ந்து கட்சியைக் கட்டிக் காத்த பெருமை தலைவர்களான திரு. A. A. றசாக்; தியாகி குஞ்சன் நாடார், திரு. சிதம்பரநாதன் நாடார், திரு. பொன்னப்பன் நாடார், திரு. P. இராமசாமிப் பிள்ளை போன்றோரைத் தமிழுலகம் உள்ளளவும் மறக்கமுடியாது.

ஆயிரக்கணக்கான தொண்டர்கள் தங்களையே பலி யாகக் கொடுத்த காரணத்தால் இன்று நாமெல்லாம் தமிழ் பேசி மகிழ்கின்றோம். அந்தத் தொண்டர்களில் ஒருவனான என் போராட்ட வாழ்க்கையை மீண்டும் வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொண்ட பேராசிரியர் டாக்டர் செ. கோவிந்தன் அவர்களுக்கு என் நன்றி உரிய தாகுக. இந்நூலுக்கு அணிந்துரை தந்த பேராசிரியர் சு. பூதலிங்கம் அவர்களை என் உளமார வாழ்த்துகிறேன். இந்நூலை உரிய காலத்தில் அச்சிட்டுத் தந்த காபிரியேல் அச்சகத்தார் தொழில்வாழ வாழ்த்துகிறேன். இல்நூலை என்போன்ற தொண்டர்களாக இருந்து துப்பாக்கி முனையில் உயிரிழந்த தியாகச் செம்மல்களுக்குக் காணிக்கை ஆக்குகிறேன். தியாகிகள் நல்வாழ்வுக்காக தியாகிகள் சங்கம் ஒன்றை ஏற்படுத்தி தான் மணம் செய்யாமல் தியாகிகள் நலத்தையே மணம்செய்த தியாகி ஆ. சிங்காராயர் அவர்களையும் வாழ்த்துகிறேன்.

"நாடு வாழ. நாம் வாழ்வோமாக"

இவண்

பொன். சின்னதம்பி

அணிந்துரை

வரலாற்றைப் படிப்பவர்கள் பலர். ஆனால் சிலரே வரலாற்றை உருவாக்குகின்றார்கள். உருவான வரலாறு சிலரால் மறக்கப்படுகின்றது. சிலரால் மறைக்கப்படுகின்றது, இன்னும் சிலரால் மறுக்கப்படுகின்றது. ஆயினும் உண்மை வரலாறு என்றும் வாழ்ந்துகொண்டே இருக்கும்.

கன்னியாகுமரி மாவட்ட வரலாற்றில் "திருவிதாங்கூர் தமிழர் போராட்டம்" எனும் வரலாறு ஓர் முத்திரைப் பதிப்பு. அவ்வரலாற்றோடு கலந்து இன்று வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் சிலரே. அவர்களைப்பற்றி அறிந்து கொள்ளுதல் இன்றியமையாத ஒன்று.

இன்றைய இளைஞர் சமூகம் நேற்றைய நிகழ்ச்சிகளைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். அப்போதுதான் அவர்களால் நாளைய வரலாற்றை உருவாக்கமுடியும். அந்த வகையில் "நான் கலந்த திருவிதாங்கூர் போராட்டம்" என்னும் இந்த நூல் மிகவும் பயன் தரத்தக்க ஒன்றாகும்.

இந்த வரலாற்று நூலில் தமிழ் மொழியின் வரலாறும் ஓரளவு கூறப்பட்டுள்ளது. தமிழர்கள்மீது விதிக்கப்பட்ட வரிகள்பற்றி ஆசிரியர் கூறுவதைப் படிக்கும்போது சம்மட்டித் தாக்குதல் விழுகிறது. தமிழர் விடுதலைப் போராட்டத்தினர் காவல் துறையினரால் தாக்குண்டசெய்தி நம் கண்களைக் குளமாக்குகின்றது. போராட்டத்திற்குத் தலைமை ஏற்றவர்கள், தனித்து நின்றவர்கள் ஆகியோர் பற்றிய செய்திகளும் படம்பிடித்துக் காட்டப்படுகின்றன.

குமரித் தந்தை அமரர் நேசமணி அவர்கள் தமிழர்க்காகப் பாடுப்பட்ட நிகழ்ச்சிகள் இன்று பலர்க்கும் தெரியா. அவற்றைத் தெரிந்துகொள்வதற்கு நூல் வகைசெய்கிறது. "தமிழ்ப் பகுதிகளுக்குத் தமிழ்படித்த ஆட்சியாளர்களையும் காவல்துறை அதிகாரிகளையும் நியமிக்கவேண்டும் என்று

1945-ம் ஆண்டு போட்ட தீர்மானம் தீர்க்கதரிசனம்போல் உள்ளது. அன்றியும் அண்டைய நாடுகளின் இன்றைய நிலையையும் எண்ணத்தூண்டுகிறது. "கண்ணீர் விட்டு வளர்த்தோம் அதனைக் கருகவிடாதீர்" என்று கூறுவது போல நூல் முடிவடைகிறது.

நூல் ஆசிரியர் அவர்கள் நிகழ்ச்சிகளோடு இரண்டறக் கலந்தவர். கருத்தூன்றி நின்றவர். காலத்தை வென்று நிற்பவர். இந்நூல் இன்றைய சமுதாயத்தினர்க்கு மட்டும் அன்றி நாளைய நல்லோர்க்கும் துணைசெய்வதாய் அமையும் என்பதில் ஐயமில்லை.

ஏழ்மை நிலை, எளிய நிலை, எல்லையற்ற அன்பு நிலை இவைகளே ஆசிரியரின் இன்றைய நிலை. தொண்டர்க்கும் தொண்டராய் வாழும் அன்னாரைப் பார்க்கும்போது தியாக வரலாறு நம் கண்முன் தோன்றுகிறது. காந்தியடிகளும், கப்பலோட்டிய தமிழனும் இன்று அவர் உருவில் காட்சி யளிப்பதாகவே கருதமுடிகிறது. போராட்ட நாட்களில் தன்னைமறந்து, தாயைமறந்து உறக்கத்தைத் துறந்து அவர் போராடியது யாருக்காக? அவருக்காகவா? இல்லை; இல்லை: இல்லவே இல்லை. நமக்காகவே! நாட்டிற்காகவே! அவர்மீது பட்ட அடிகள்தான் இன்று நாம் செல்லும் படிக் கட்டுகள். அவர் அமைத்துத்தந்த பூஞ்சோலையில்தான் இன்று நாம் பூ பறிக்கிறோம்.

இளைஞர் சமுதாயமே! இன்றைய சமுதாயமே! புடம் போடப்பட்ட வரலாறு தடம்புரண்டு விடுதல்கூடாது. தற்கொலை செய்துவிடுதல் கூடாது. தியாகத் தலை முறையை மறந்துவிடுதல்கூடாது. நூல் ஆசிரியர் அவர்கள் இன்னும் எத்தனையோ வரலாறுகளைத் தமிழ்நாட்டிற்குத் தரவேண்டும் என்று அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

பேராசிரியர் **சு. பூதலிங்கம்**, எம். ஏ.
தமிழ்த்துறை
பயோனியர் குமாரசுவாமிக் கல்லூரி
நாகர்கோவில்

நான் கலந்த திருவிதாங்கூர் தமிழர் போராட்டம்

சேர நாட்டில் தமிழர் ஆட்சி வடவர் வருகையால் வீழ்ச்சியுற்றது. வடவர்கள் சேர நாட்டிற்குள் புகுந்ததும் மன்னர்களைக் கவர்வதற்காகத் தங்கள் பெண்களை மறு மனையாட்டியாகவும், காமக்கிழத்தியாகவும் ஏற்பாடு செய்துகொடுத்தனர் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். ஒரே மனைவியோடு வாழ்தல் சிறப்பு என்றிருந்த தமிழ்ச் சமூதாயத்தில் பல பெண்களைத் திருமணம் செய்தலே சிறப்பு என்ற நிலையை வடமொழி யாளர்கள் கொண்டுவந்தனர். இதனால் மன்னர்கள் வடமொழிப் பற்றாளர்களாக மாறினர்.

ஒழுக்கக்கேட்டை உருவாக்க மருமக்கள் வழி மான் மியத்தை உருவாக்கினர். மொழியிலும் மாற்றம் ஏற் பட்டது. தமிழ் மொழியும் வடமொழியும் கலந்த மலை யாள மொழி உருவானது. புதுச்சாதிகள் பல தோன்றின. நாளாவட்டத்தில் தமிழ் மொழி ஆட்சிபீடம்விட்டுக் குடிசையில் பேசும் மொழியாக மாறியது. இன்றும் கேரளத்தில் குடிசை வாழ்மக்கள் தமிழே பேசுகின்றனர்.

தமிழ் மொழி ஆட்சிபீடம் இழந்ததும் ஆண்ட பரம் பரையினர் தூக்கி எறியப்பட்டுச் சமுதாயத்தில் தாழ்ந்த இனமாகக் கருதப்பட்டனர்.

தமிழர்களுள் மருமக்கள் வழிமான்மியத்தைப் பின் பற்றிய வெள்ளாளர் சமுதாயம் தவிர்த்து அனைத்துச் சமுதாயத்தவரும் துன்புறுத்தப்பட்டனர்.

தமிழர்கள்மீது தாடிவரி, முலைவரி, தலைவரி போன்ற வரிகள் விதிக்கப்பட்டன. நீதிமன்றங்களில் தமிழ் வழக்கறிஞர்கள் மலையாள வழக்கறிஞர்கள் உட்காரும் இடத்தில் உட்காரக்கூடாது என்ற சட்டம் பிறந்தது.

இதனை எதிர்த்து பால் வி. டானியெல் என்னும் பெரியார் போராடினார். அவர் சாதியால் இரண்டுபட்டு நின்ற வெள்ளாளர்களையும் மற்ற தமிழ் இனத்தினரையும் ஒன்றுதிரட்டி மலையாள அரசுக்கு எதிராகக் குரல் கொடுத்தார். இவருடைய உழைப்பால் சாதி வேறுபாடுகளை மறந்து 'தமிழர் நாம்' என்ற உணர்வு எல்லா சமூகத்தாரிடமும் உருவானது.

இச்சமயத்தில் மலையாளிகளின் கொடுமை காரணமாகப் பல்வகையில் துன்பப்பட்ட திரு. பால் வி. டானியெலைக் குருவாகக்கொண்ட திரு. ஜே. சத்தியநேசன், பி. ஏ.; பி. எல். அவர்கள் எங்களைப் போன்ற பலரை அழைத்து 1945 மே மாதம் 1-ம் தேதி நாகர்கோவில் ஜில்லா கோர்ட்டுக்கு முன்பக்கமுள்ள பால் வி. டானியெல் உறவினர் கட்டிடத்தில் (இப்போது இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் இயங்கிவருகிறது). ஒரு கூட்டத்தைக்கூட்டினார். அதில் நான் கலந்துகொண்டேன். அக்கூட்டத்திற்கு வழக்கறிஞர் சத்தியநேசன் கண்வீனராக இருந்தார். பல வாதங்களுக்குப்பின்னால் திருவிதாங்கூருக்குள் தமிழர்கள் நிம்மதியாக வாழவேண்டுமென்றால், திருவிதாங்கூருக்குள் தமிழ் மாகாணம்(மாநிலம்) அமையவேண்டும். அதற்காக அரசை வற்புறுத்திப் போராட வேண்டுமென்ற ஒரே குறிக்கோளை நிலைநிறுத்தி தீர்மானம் போடப்பட்டது, கூட்டத்தில் இயக்கத்திற்கு "அகில திருவிதாங்கூர் தமிழர் காங்கிரஸ்" என்று பெயர் சூட்டவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு கூட்டம் நடக்கிறது என்று தெரிந்ததும் வெளியேநின்று மலையாளிகள் "சாணாமார் கூடி நாடு

பிரிக்கான் போகுந்நு'' என்று கூறி சத்தம்போட்டனர். எங்களில் பலர் அவர்களைத் தாக்க முற்பட்டார்கள். ஆனால் கூட்டத் தலைவர் அறையைவிட்டு வெளியே சென்றவர்களை இழுத்துவந்து ''உட்காருங்க, அவர்களோடு நாமும்சென்று சண்டைபோட்டால் போலீசார் வந்து கூட்டம் நடக்காமல் ஆக்கிவிடுவார்கள்'' என்று கூறினார்.

அப்போது சில போலீசார் வந்து, ''இவிடே எந்துடா கூட்டம் போயீண்டா'' என்று கூறினர். எவ்வளவோ கூறியும் கேட்கவில்லை. பின்னர் வழியின்றி கலைந்துபோனோம்.

அன்று கூட்டத்திற்கு வந்தவர்கள்

திருவாளர்கள்

,, 1 ஜே. சத்தியநேசன், தலைவர்
,, 2 எ. குஞ்ஞுகிருஷ்ணன் நாடார், நெய்யாற்றங்கரை
,, 3 எ. குட்டன் நாடார்
,, 4 என். கோவிந்தராஜ், வழுதனம்பழம்
,, 5 றி. தாணுவன் பொன்னையன், அருவிக்கரை
,, 6 நதானியெல் என்ற குஞ்சன் நாடார், குளச்சல்
,, 7 எ. பொன்னையன், ஆற்றூர்
,, 8 தெ. நேசையன், ஆற்றூர்
,, 9 எ. சண்முகம் பிள்ளை; தோவாளை
,, 10 வி. உமைதாணுப்பிள்ளை, அகஸ்தீஸ்வரம்
,, 11 கே. சி. செல்லையா
,, 12 டாக்டர் தங்கையா, குலசேகரம்
,, 13 எ. அப்பாவு ஆசான், மேய்க்கோடு
,, 14 எஸ். கோவிந்தன், தொடுவெட்டி
,, 15 ஆர். இராமகிருஷ்ணன் நாடார், குருந்தன்கோடு

திருவாளர் 15 எ. இராமசாமி நாடார், அருவிக்கரை
,, 17 ஜி. அருளப்பன் நாடார், குருந்தன்கோடு
,, 18 என். நாராயணபெருமாள்,
அகஸ்தீஸ்வரம்
,, 19 தாவீது, குலசேகரம்
,, 20 ஜே. பீற்றர் ஜாண், அருமனை
,, 21 எ. கே. செல்லையா, ஐயம்பாறைவிளை
,, 22 எம். எம். நாடார், காப்பிக்காடு
,, 23 டி. நல்லதம்பி நாடார். தொடுவெட்டி
,, 24 எ. அப்பாவு பணிக்கர், மார்த்தாண்டம்
,, 25 சின்னதம்பி ஆகிய நானும் மற்றும் சிலரும் கூடி இருந்தோம்.

சில நாட்கள் கழித்துத் தலைவர் சத்திய நேசனும் நானும் நதானியெலைச் சந்தித்தோம்.

நதானியெல் வெளியே புறப்படத் தயாராகிக்கொண்டிருந்தார். நாங்கள் அவரிடம் நடந்த செய்திகளைக் கூறி, கூட்டத்திற்கு வரும்படி அழைத்தோம். அவர் மகிழ்வுடன் வருகிறேன் என்றார். சந்தியநேசன் அவர்களிடம் நீங்களே இந்த இயக்கத்திற்குத் தலைமை ஏற்று நடத்த வேண்டுமென்று சொன்னார். வீட்டிலிருந்து திரும்பியதும் நான் தலைவர் சத்தியநேசனிடம் நீங்கள் தலைமையை ஏன் அவர்களுக்கு விட்டுத் தருவதாய்க் கூறினீர்கள் என்று கேட்டேன்.

அவர் என்னிடம் சொன்னார். "சின்னதம்பி எனக்கு யார் தீட்டினாலும் அரிசி வெளுக்கவேண்டும்" என்று கூறினார்.

இந்த இயக்கத்திற்கு வழக்கறிஞர் பலரை அழைத்தோம். தமிழ் வழக்கறிஞர் பலரும் ஆதரவு தருவதாகக் கூறினர். மக்களிடம் இவ்வியக்கத்தைப் பரப்பவேண்டுமென்ற நோக்கத்தோடு 1945 ஜூன் மாதம் கடைசியில் ஒரு பொதுக்கூட்டத்தைத் திங்கள் சந்தையில்

கூட்டினோம். மதுரையில் சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருந்த போராட்ட வீரர் தியாகி சிங்கா ராயரும் நானும் "இங்க்" மூலம் சுவர்களில் கூட்டம் நடக்கும் இடம், தேதி ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதிப் போராடுவோம். இவ்வாறு போட்ட கூட்டங்களில் திரு. ஜே. சத்தியநேசன் தலைவராகவும் நதானியெல் சிறப்புச் சொற்பொழிவாளராகவும் இருந்து பேசுவார்கள். நாங்கள் எங்கு கூடிப்பேசினாலும் அரசு கண்காணித்து வந்தது. போலீசார் வரமுடியாத இடங்களில் தனியாகக் கூடிப் பேசுவோம்.

1945-ல் மன்னரின்கீழ் ஐக்கிய கேரளம் அமைக்க வேண்டுமென்ற எண்ணம் திருவிதாங்கூர் சமஸ்தானக் காங்கிரஸ் தலைவர்களிடையே உருவானது. இதற்குக் காசர்கோடு முதல் கன்னியாகுமரி வரையுள்ள பகுதிகளைச் சேர்க்க வேண்டுமென்று திட்டம் தீட்டினர். இதற்கு மலையாள காங்கிரசார் பெரும்பகுதியினர் ஆதரவு தெரிவித்தனர். ஆனால் தமிழ் காங்கிரசார் இதனை எதிர்த்தனர். பாறச்சாலையில் குஞ்ஞன் நாடார் தலைமையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. நான், தியாகி சிங்கா ராயர் மற்றும் சிலர் ஐக்கிய கேரளம் அமைத்தால் தமிழர்கள் அழிவது நிச்சயம் என்று ரோட்டோரங்களில் உள்ள மரங்களிலும் சுவர்களிலும் தாளில் எழுதி ஒட்டுவோம். கபரியேல், காஞ்சிரோடு அருமனை பொன்னுமுத்து. அருமனை பொன்னையன் போன்றோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதுபோன்று தோவாளையிலும் போராட்டம் நடந்தது. ஆர். கே. ராம், திரு, பி, சிதம்பரம்பிள்ளை, டி. எம். சுந்தரம், எஸ். சிவன் பிள்ளை, பி. எஸ். மணி மற்றும் சிலர் எதிர்த்தனர். இவர்கள் ஆதரவும் எங்களுக்குக் கிடைத்தது. திரு. நதானியெலும் ஜே. சத்தியநேசனும் கூடி கூட்டம்நடத்த முன்ஏற்பாடுகள் செய்தனர். 1945 டிசம்பர் 10-ம் நாள் கூட்டம் நடந்துவது என்று முடிவுசெய்தனர்,

கூட்டத்திற்குஉரிய விளம்பரப் பொறுப்பை நானும் தியாகி சிங்காராயரும் ஏற்றுக்கொண்டோம்.

கூட்டம் நடக்கும் சில நாட்களுக்குமுன் நதானியெல் சத்தியநேசனை அழைத்து எ. நேசமணியையும் கூட்டத்திற்குக கூப்பிடுங்கள் என்றார். நாங்கள் நேசமணியைப் பார்க்கப் புறப்பட்டோம். எங்களைக் கண்ட நேசமணி "ஆ! என்ன! வாங்க! வாங்க" என்றார்.

பிறகு சத்தியநேசன் அவர்கள், நேசமணியிடம் விசயத்தைக்கூறி தாங்களும் கண்டிப்பாகத் திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரசில் உறுப்பினராய்ச் சேர வேண்டுமென்று கூறினார்.

அதற்கு நேசமணி நான் பல ஆண்டாகத் தமிழ் மக்களுக்காகப் பாடுபட்டு வருகிறேன். சி. பி. இராமசாமி ஐயர் தவிர அனைத்து அரசு உயர்அதிகாரிகளும் நமக்கு எதிராகவே உள்ளனர் என்றார். இனிமேல் மலையாளிகளுடன் சேர்ந்து வாழமுடியாது. மலையாள அரசை எதிர்த்துப் போராடினால்தான் வெற்றி பெற முடியும், இதன்பொருட்டுப் பலதடவை கூடி நாங்கள் பலருடன் ஆலோசித்து வருகிறோம் என்றார்.

நீங்கள் விரும்பினால் நான்தொடங்கும் இயக்கத்தில் எல்லோரும் வந்துசேருங்கள் என்றார்.

நாங்கள் நேசமணியிடம் விடைபெற்று நதானியெலிடம் சென்று எ. நேசமணி கூறிய செய்தியைக் கூறினோம். நதானியெல் சரி 'நீங்கள் கூட்டத்திற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்' என்றார். பிறகு நதானியேல் தன்னைச் சந்திக்க வந்தவரும் நேசமணியின் நண்பருமான காந்திராமனை அனுப்பிவைத்தார். காந்திராமன், வேலாயுதப் பெருமாளை உடன் அழைத்துக்கொண்டு நேசமணியைப் பார்க்கச்சென்றார். அவர்களிடமும் எங்களிடம் கூறிய செய்தியையே கூறியதாகக் காந்திராமன் பேச்சிலிருந்து தெரிந்துகொண்டேன்.

நாங்கள் கூட்டம் நடக்கும் நாட்களை அறிவித்ததால் 1945 டிசம்பர் 16-ம் நாள் கூட்டம் நடத்தி ஆக வேண்டுமென்று முடிவு செய்தோம்.

1945 டிசம்பர் 16-ம் நாள் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் தலைவராக நதானியெல் இருந்தார். வரவேற்புரையைச் சத்தியநேசன் நிகழ்த்தினார், கூட்டத்தில் உள்ள தொண்டர்கள் நதானியெலைத் தலைவராகத் தெரிந்தெடுத்தனர். ஆர். கே. ராம் அவர்களைப் பொதுச் செயலாளராக நியமித்தனர். காந்திராமனைத் தளபதியாக நியமித்தனர். ஸ்ரீ வி. தாஸ், இரா. வேலாயுதப் பெருமாள் இருவரையும் துணைச் செயலாளராகத் தேர்ந்துஎடுத்தனர். திருவாளர்கள் பொன் றசலையா. கே. நாகலிங்கம், வி. மார்க்கண்டன், டாக்டர் தங்கையா, குஞ்ஞிகிருஷ்ணன் நாடார், பி. அர்ஜுனன் நாடார், தேவகடாட்சம் போன்றோருக்கு முக்கிய பொறுப்புகள் கொடுத்தனர்.

திட்டமிட்டுக் கூட்டத்தில் ஆரம்பத் தலைவர் சத்தியநேசன் ஒதுக்கப்பட்டதால் ஆரம்பகாலஉறுப்பினர்கள் வருத்தம் அடைந்தனர். டாக்டர் தங்கையா, குஞ்ஞிகிருஷ்ணன் ஆகியஇருவரும் பதவிகள் வேண்டாமென்று கூறினர். விளம்பரப் பொறுப்புகள் எனக்கும் தியாகி சிங்காராயருக்கும், எ. பீற்றர் ஜாண்சனுக்கும் கொடுக்கப்பட்டது. (என் அழைப்பின்பேரில் சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்ட சிங்காராயர் மதுரையிலிருந்து வருவார்).

தோவாளையில் வந்திருந்த சிலர் படபடவென பதவிக்குப் பெயர்களை முன்மொழிந்தனர். அவர்கள் சத்தியநேசனை ஒதுக்குவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தனர். இதனால் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது அப்போது உதவித் தலைவர் பெயருக்கு நதானியெல் சத்தியநேசனை முன்மொழிந்தார். நான் வழிமொழிந்தேன். சத்தியநேசன் பதவியை ஏற்றுக்கொள்ளவில்லை.

அன்று வந்திருந்தவர்கள்

திருவாளர்கள் எஸ். நதானியெல்
,, ஜே. சத்தியநேசன்
,, காந்திராயன்
,, எஸ். சிவன் பிள்ளை
,, எ. குஞ்ஞுகிருஷ்ணன் நாடார்
,, எ. குட்டன் நாடார்
, டி. டி. டானியல்
,, வி. உமைதாணுப் பிள்ளை
,, எஸ். கோவிந்தன்
,, ஆர். இராமகிருஷ்ணன் நாடார்
,, ஆர். கே. ராம்
,, எ. அப்பாவு பணிக்கர்
,, டாக்டர் தங்கையா
,, ஜே. பீற்றர் ஜாண்சன்
,, பொன். றசலையா
,, எ. சண்முகம் பிள்ளை
,, கே. சி. செல்லையா
,, எ. அப்பாவு ஆசான்
,, எஸ். பொன்னையன்
,, எ. இராமசாமி நாடார்
,, என். நாராயணபெருமாள்
,, எம். எம். நாடார்
,, பால் வி. டானியல் மகன் தங்கத்துரை
,, எ. கே. செல்லையா
,, ஸ்ரீ வி. தாஸ்
,, தியாகி சிங்காராயன்
,, பி. எஸ். மணி
,, பி. மார்க்கண்டன்
,, வெ. நாராயணன்
,, ஒய். டானியெல்
,, வி. நேசையன்
,, எ. ராஜையா
,, தேவகடாட்சம்

திருவாளர் டி. பொன்னுமணி
,, சுவாமி நாடார்
,, ஜீ. ஆர். ஜோண்ஸ்
,, இரா. வேலாயுதம் பிள்ளை
,, என். அகிமாஸ்
,, பொன் சின்னதம்பியாகிய நான்
மற்றும் சிலரும்

வந்திருந்தனர்! முதல் கூட்டத்திலேயே ஜாதி உணர்வு மேலோங்கி இருந்தது. முன்பின் பாடுபடாதவர்களுக்குப் பதவிகள் கொடுக்கப்பட்டன. இதனால் பலர் வெறுப் படைந்து நேசமணி ஆங்காங்கு கூட்டும் கூட்டங் களுக்குச் சென்றார்கள். நான் நதானியெல் தலைமை யிலேயே இருந்தேன். இவ்வியக்கம் ஒர் அரசியல் கட்சி யாக மாறவில்லை. மக்கள் நேசமணிக்கு ஆதரவு அளித் தார்களே தவிர இந்த இயக்கத்திற்கு ஆதரவு அளிக்க வில்லை. முந்திய தலைவர் சத்தியநேசன் கூட்டங் களுக்கு வரவில்லை. இயக்க உறுப்பினர்மீது போலீசார் அத்துமீறி தாக்கினர். இயக்கப் பொறுப்பாளர் யாரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யவில்லை. தலைவர் ஆறுதல் கூறினார். ஆனால் அரணாக இருக்க வில்லை. இதனால் ஒவ்வொரு உறுப்பினரும் நேசமணி இல்லம் நோக்கிச்செல்ல ஆரம்பித்தனர்.

இதன்பொருட்டு 19'5 ஜனுவரி மாதம் 2-ம் தேதி கருத்துடையான் முத்தையா வீட்டில்வைத்து ஒருகூட்டம் கூடியது. அக்கூட்டத்தில் அங்கு கூடிய தொண்டர்கள் வேண்டுதலுக்கிணங்க கீழ்க்கண்ட தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. தமிழ்ப் பகுதிகளுக்குத் தமிழ்படித்த ஆட்சியாளர்களையும் போலீஸ் அதிகாரிகளையும் நியமிக்க வேண்டுமென்றும். தமிழ் நலம்பேண ஒரு அரசியல் ஸ்தாபனம் உருவாக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அன்று வருகைதந்த உறுப்பினர்கள்

திருவாளர் எ. நேசமணி, தலைவர்
,, எம். உல்லியம்
,, ஞானசிகாமணி
,, பி. டி. தியாகராஜ்
,, பி. சகாதேவன்
,, என். இராமசாமி நாடார்
,, எ. பி. டானியெல்
,, எ. கே. செல்லையா
,, எஸ். கணேச பிள்ளை
,, தாம்சன், பெருவட்டர் கண்ணனூர்
,, டி. கைச். ஜார்ஜ். மார்த்தாண்டம்
,, க. சுந்தரம். மாவறவிளை
,, எஸ். முகமது ஷாலி
,, வே. சின்னையன் பட்டாளம், மாறாங்கோணம்
,, சிரோன்மணி, மாவறவிளை
,, க. முத்தையா, மாவறவிளை
,, என். ஈசாக், கண்ணனூர்
,, எஸ். செல்வம், கல்லங்குழி
,, லாசரு பெருவட்டர், மணலிக்கரை
,, பி. சி. நாடார், சாமியார்மடம்
,, கே. முத்தையன், வடக்குவிளை

மற்றும் பலர் கூடினார்கள் என திரு. கருத்துடையான் வீட்டிலிருந்து தெரிந்துகொண்டேன். நான் அக்கூட்டத்திற்குச் செல்லவில்லை.

இக்கூட்டத்திற்கு திரு.எ. நேசமணி தலைவராகவும் எ. கே. செல்லையா செயலாளராகவும் செயற்குழு உறுப்பினர் (1) எம். உல்லியம், (2) எஸ். கணேச பிள்ளை, (3) எஸ். முகமது ஷாலி, (4) பி.சி. நாடார், (5) டி.கைச். ஜார்ஜ் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1945 டிசம்பர் 9-ம் நாள் நெய்யூரில் நடந்த செயற்குழு கூட்டத்தில் எ. நேசமணி "திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ்" என்று தம் இயக்கத்திற்குப் பெயர் சூட்டினார்.

அக்கூட்டத்தில் நானும் கலந்துகொண்டேன். அகில இந்திய தமிழ் நாடு காங்கிரஸிலிருந்து பலர் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசில் உறுப்பினராய்ச் சேர்ந்தனர். ஒரு ஆண்டு காலம் கிளைகள் அமைப்பதிலேயே நேசமணி ஈடுபட்டார். அடிக்கடி செயற்குழு கூடி முடிவெடுக்கும். எ. நேசமணி வீட்டிலேயே செயற்குழு கூடியது.

1946 ஜுன் மாதம் 30-ம் தேதி ஒரே நேரத்தில் ஒன்பது தாலுகாவிலும் கூட்டம் நடந்தது. அக்கூட்டங்கள் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசின் கொள்கை விளக்கக் கூட்டங்களாக விளங்கின.

1946 டிசம்பர் 9-ம் தேதி நெய்யூரில் நடந்த தொண்டர் மாநாட்டில் கட்சியின் ஓராண்டு கால நிறைவு விழா கொண்டாடப்பட்டது.

1947-ம் ஆண்டு ஆலன் மண்டபத்தில் நடைந்த கூட்டத்தில் பல பிறகட்சி தொண்டர்கள் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசில் வந்துசேர்ந்தனர். அகில திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தொண்டர்கள் கூட்டத்தில் வந்து கலாட்டா பண்ணினார்கள். மீண்டும் தங்கள் கட்சியில் வரும்படி நேசமணியை அழைத்தனர்.

1948-ம் ஆண்டு ஜனவரி 8-ம் தேதி ஆலன் மண்டபத்தில் மீண்டும் ஒரு கூட்டம் நடந்தது. சரித்திர பிரசித்திபெற்ற கூட்டம் இது. அக்கூட்டத்திற்கு நேசமணி தலைமை தாங்கினார். அன்று திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் புத்துயிர் பெற்றது. அக்கூட்டத்தில்

1) மலையாளிகள் எதிர்ப்பு இயக்கம்
2) மலையாள எதிர்ப்பு இயக்கம்
3) தமிழர் விடுதலை காங்கிரஸ்
4) அகில திருவிதாங்கூர் தமிழர் காங்கிரஸ்
போன்ற இயக்கங்கள்

திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசில் சங்கமம் ஆயின. நேசமணி பெருந்தலைவராய் இருந்தார். முஸ்லீம் லீக்கின் ஏக தலைவராய் இருந்த மதிப்புமிகு எ. எ. ரசாக், எம்.பி. அவர்களும் இச்கூட்டத்தில் தன்கட்சி தொண்டர்களுடன வந்து இணைந்தார்கள். நதானியெலைக் கட்சி தலைவராய் இருக்கும்படி எ. நேசமணி கேட்டுக்கொண்டார். அதனை நதானியெலும் ஏற்றார். இணைந்தபின் எ. நேசமணி பொதுத் தலைவராகவும் என். நதானியெல் கட்சியின் தலைவராகவும் டி. இராமசாமிப் பிள்ளை உதவித் தலைவராகவும போட்டியின்றித் தெரிந்தெடுக்கப் பட்டனர். ஒவ்வொருவருக்கும் பழைய பொறுப்புகள் கொடுக்கப்பட்டன. எ. எ. ரசாக் சி. கோபாலகிருஷ்ணன் சிதம்பரநாதன் நாடார், உல்லியம், பொன்னப்பன் நாடார் போன்றோர் கட்சியை வளர்க்க எத்தகைய தியாகம் செய்யவும் தயாராயினர்.

செயற்குழு கூட்டம் ஆனாலும் சரி பொதுக்குழு கூட்டமானாலும் சரி முக்கிய தலைவரான நேசமணி தலைமை வகிப்பார்,ஒருபக்கம் நதானியெலும் மறுபக்கம் இராமசாமிப் பிள்ளையும் அமர்ந்து இருப்பார்கள். 1954-ல் குஞ்ஞன் நாடார் போராட்டத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

என்னால் மறக்கமுடியாத என் போராட்ட நாட்களைக் குறிப்பிடுகிறேன். புதுக்கடையில் 1954 ஆகஸ்டு 11-ம் நாள் திரு. கோபாலகிருஷ்ணன் அட்வகேட் அவர்கள் கூட்டம் நடத்திக்கொண்டிருந்தார்கள். அக்கூட்டத்தில் நாயர்கள் வந்து குழப்பம் செய்தனர். அவர்களுக்கு

உதவியாக குறுப்புமார்கள் இருந்தார்கள். இதனால் போலீசார் அங்குவந்தனர். துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. போலீசார் தமிழ்யக்களைச் சுட்டனர். அதில் பலர் இறந்தனர். பலர் குண்டடிப்பட்டுக் கையும் காலும் இழந்தனர். அன்று மார்த்தாண்டத்தில் பப்பு பணிக்கர், பொன்னையன் போன்றவர் போலீஸ் குண்டடியால் இறந்தனர். நான் அருமனை பஞ்சாயத்து உபதலைவராகவும் அருமனை களியல் தமிழர் இயக்கத் தலைவராகவும் இருந்தேன். தலைவர் நேசமணி ஆணைப்படி எல்லா போராட்டங்களிலும் நான் ஈடுபடுவேன். என்கீழ் மறியல் செய்தவர்களில் ராஜதாஸ், அப்பு என்ற பரமேஸ்வரன் மிகவும் முக்கியமானவர்கள் ஆவர். (11-8-1954 மறியல் நாள்) மறுநாள் காலையில் திருவட்டார் சப் இன்ஸ்பெக்டர் சங்கரன் நாயரும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மார்க்கண்டய்யரும் போலீசுடன் வந்து என்னை அருமனையில் வைத்துக் கைதுசெய்தனர். தோக்கு கொண்டு என்னை இடித்தனர். எனது கால் மணிக்கட்டில் குத்திக் காயப்படுத்தி "இடா நேசமணி ராஜா எவிடேடா, நிங்களுக்குத் தமிழ் மாகாணம் வேணுமோடா" என்று கேட்டுப் பலவிதமாகத் தொந்தரவு செய்தனர். ஐம்பது நாள் போலீஸ் காவலில் இருந்தேன். என் பெயரில் ஏழு பெரிய கேஸ்கள் போட்டார்கள். நான்காவது கேசில் முதல் பிரதி. நான் கைதானதும் எனது வீட்டில் இருந்த ஒரு லட்சம் ரூபாய் வரையிலும் கொள்ளையடிக்கப்பட்டது. இதனை நான் சிறைச்சாலையில்வைத்து நண்பர்கள்மூலம் தெரிந்துகொண்டேன் இன்றும் என் வாழ்க்கை ஓர் திறந்த புத்தகமே. அதில் மறைவோ அல்லது மறைப்போ எதுவுமில்லை.